# அருள்மணி மாலை

தொகுப்பு:

“சனாதனதர்ம ஸேவாரத்ன” அக்ரி கண்ணன் குருஸ்வாமி



## இந்து சமய மன்ற ஆண்டு விழா மலர்

ஸ்ரீ நந்தி சித்தர் பீடம், நந்திவரம்-கூடுவாஞ்சேரி-603 202

ஹரஹர சங்கர! உ ஜயஜய சங்கர!

ஸ்ரீ குருப்யோ நம:



ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராச்சார்ய மத்யமாம் !
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் !!

# சமர்ப்பணம்

திருநந்திகேஸ்வரம் (நந்திவரம்) அருள்மிகு சௌந்தர்ய நாயகி உடனுறை ஸ்ரீ நந்தீஸ்வர பெருமானின் திருக்கோயிலில் வெகுதான்ய வருஷம் ஆவணித்திங்கள் 21-ம் நாள் (6-9-98) அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் நந்திவரம்-கூடுவாஞ்சேரி ஸ்ரீ நந்தி சித்தர் பீடம் இந்து சமய மன்றத்தின் சார்பில் ஆண்டு விழா மலரை மோனத் தெய்வமாய் பிருந்தாவனத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் காஞ்சி மாமுனிவரின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்து வெளியிடுகிறோம்.

இவண்

புலவர் கயிலை. இராஜகணபதி, M.A., B.Com., FICA. D.S.S.,
தலைவர்

புலவர் க.ஆத்ரேய சுந்தரராமன் (எ)
க.இராகவன், M.A., B.Ed. P.G.D.C.P., D.S.S.,
செயலாளர்.

செயற்குழு உறுப்பினர்கள்:

திரு C. பழநி, கூடுவாஞ்சேரி.
திரு V. ராஜகோபால் D.P.T. நந்தீஸ்வரர் நகர்
திரு N. வேதமூர்த்தி B.Com., கற்பகாம்பாள் நகர்
திரு V. குமரேசன் M.A., B.Com., கூடுவாஞ்சேரி
திரு L.புண்ணியகோட்டி, நந்திவரம்
திரு M.லக்ஷ்மிபதி, M.A. நந்திவரம்
திரு K.மாணிக்கம், B.Sc.,நந்திவரம்
திரு V.மயூரநாதன் B.Com., ராணி அண்ணாநகர்
திருமதி மாலினி லோகரஞ்சன் B.Sc., D.P.R.
சென்னை பிரதிநிதி

# இந்து சமய மன்றம்
## (ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சமயச்சேவை நிறுவனம் நந்திவரம் - கூடுவாஞ்சேரி)

மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், சாதி, சமய பூசலற்ற ஒரு ஆன்மீக சமுதாயத்தை உருவாக்கவும், நமது பண்டைய பாரதபூமியின் புகழ்காக்கவும், சனாதன தர்ம நெறிகளை உலகிற்கு எடுத்துரைக்கவும், மக்கட்தொண்டு ஆற்றிடவும் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் அருளாசிகளுடன் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருள் வழி காட்டுதலின்படி அமைக்கப்பெற்ற இம்மன்றம் நமது நந்திவரம்-கூடுவாஞ்சேரி பகுதியில் சீரும் சிறப்புமாக விழாக்கள் கருத்தரங்கம், பூஜைகள் என சிறப்பாக நடத்திவருகிறது. நந்திவரம்-கூடுவாஞ்சேரி பகுதியில் கோயில் விழாக்கள், பொது நிகழ்ச்சிகள், தமிழ் வளர்ச்சிப்பணிகள், ரத்ததானமுகாம்கள் என்று ஒரு சமூக, சமய, பொது அமைப்பாக விளங்கி வரும் இம்மன்றத்தின் பணிகள் கீழ்கண்ட அமைப்புகளின் மூலம் விரிவடைந்து வருகிறது.

*ஸ்ரீநந்தி சித்தர் பீடம்* : சமய ஞானபீடமான இதன் மூலம் சித்தர் தத்துவ ஆராய்ச்சி மற்றும ஆன்மீக பூஜாமுறைகள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவது போன்ற பணிகளும், சமய சொற்பொழிவு களும், நடைபெறுகிறது. சமய சான்றோர்களுக்கு விருதுகளும் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

*நந்தீஸ்வரர் பக்த ஜனசபா*: நந்திவரத்தில் உறையும் இறைவனின் திருநாமம் கொண்டு விளங்கும் இந்த அமைப்பு இளைஞர் அமைப்பாகும். இதன்மூலம் ரத்த தான முகாம், ஏழை குழந்தைகளுக்கு, இலவச பாடப்புத்தகம், நோட்டு புத்தகங்கள், உடை போன்றவை அளித்து சமுதாய தொண்டாற்றி வருகிறது.

*ஸ்ரீ காமாக்ஷி மகிளா மண்டலி* : மகளிர் அமைப்பான இதன் மூலம் திருக்கோயில்களில் திருவிளக்கு வழிபாடு, சங்கீத வகுப்புகள் போன்றவை நடைபெறுகிறது.

*ஸ்ரீ சங்கரவாணி வானொலி சிறுவர்சங்கம்*: சிறுவர்களின் அமைப்பான இது, வளரும் போதே குழந்தைகளின் திறமையை ஊக்குவித்து போட்டிகள் நடத்தி பரிசளித்து, நம் தமிழ் இலக்கியங்கள், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பாடல்களில் தேர்ச்சி பெறச் செய்து, அகில இந்திய வானொலியில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து பணியாற்றி வருகிறது.

*ஜனகல்யாண்*: மன்றத்தின் இணை அமைப்பான இதுவும் இந்து சமய மன்றத்துடன் இணைந்து மேற்கண்டபணிகளை ஆற்றி வருகிறது.

இந்து சமய மன்றத்தின் பெருமுயற்சியின் விளைவாக சமீபத்தில் நந்திவரம் அருள்மிகு சௌந்தர்யநாயகி உடனுறை ஸ்ரீ நந்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பெற்று ஊர் பெரு மக்கள், ஆதரவுடன் சீரும் சிறப்பாக மகாகும்பாபிஷேகம் நடந் தேறியது.





**ஸ்ரீ சௌந்தர்ய நாயகி சமேத ஸ்ரீ நந்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்,**
**திருநந்திகேஸ்வரம் நந்திவரம்-கூடுவாஞ்சேரி-603 202.**

# ஸ்தல வரலாறு

**திருச்சிற்றம்பலம்**

*நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளேச்சுர நாகேச்சுர*
*நாகளேச்சுர நன்காண கோடீச்சுரங் கொண்டீச்சுரந்திண்டீச்*
*சுரங் குக்குடேச்சுரமக் கீச்சுரங் கூறுங்கால் ஆடகேச்சு,*
*மகத்தீச்சுர மயனீச்சுர மத்தீச் சுரமந்தன் கானல் ஈடுதிரை*
*ராமேச்சுரமென்றென்றேத்திறைவனுறை சுரம் பலவுமியம்பு வோமே.*

*-அடைவுத் திருத்தாண்டகம் (அப்பர்)*

சென்னையிலிருந்து செங்கற்பட்டு செல்லும் மார்க்கத்தில் சுமார் 36 கி.மீ. தொலைவில் திருநந்திவரம் எனும் திருப்பெயர் கொண்டு கூடுவாஞ்சேரி ரயில்நிலையத்திற்கு அருகில் உள்ள இத்திருத்தலம் தொண்டை நன்னாட்டு மிகப்பழமையான சிவஸ்தலங்களில் ஒன்றாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புப்பெற்று விளங்கும் இத்தலத்தில் இறைவன் சுயம்புலிங்கமாக எழுந்தருளியுள்ளார். இவ்விறைவனை சைவ சமயாச்சாரியர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் வைப்புத்தலமாக ராமேஸ்வரத்திற்கு இணையாக வைத்து தேவாரத்தில் பாடியுள்ளார். இங்குள்ள நந்திதீர்த்தம் மிகவும் சிறப்புப்பெற்றது. தருமதேவதையான நந்தி இத்தலத்து இன்றவனை வழிபட்டமையாலும் சித்தர்கள் பூஜித்து வருவதாலும் இவ்விறைவனுக்கு நந்தீஸ்வரர் எனும் திருநாமம் வழங்குகிறது.

முன்னொரு காலத்தில் புதர்கள் சூழப்பெற்று, புற்று ஒன்று இவ்விடத்தில் இருந்ததாகவும் காராம்பசு அப்புற்றில் தினமும் பால் சொறிந்து வந்ததாகவும் சில நாட்கள் சென்ற பின்பு இதைக் கண்ணுற்ற பசுவின் உரிமையாளர் புற்றை வெட்ட அச்சமயத்தில் அனைவரும் அதிர்ச்சியுறுமாறு அசரீரி ஒன்று இங்கு ஈஸ்வரன் உறைவதாக உணர்த்தி கோயில் அமைத்து வழிபடுமாறு கூற அப்போதிருந்த அரசனால் இத்திருக்கோயில் எழுப்பப்பட்டு மிக விமரிசையாக பூஜைகள் நடைபெற்றதை கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இத்தலத்து இறைவியின் திருநாமம் சௌந்தர்ய நாயகி என்பதாகும். அழகு தமிழில் "அழகொளிர்நாயகி" என்றும் "அழகுடைநாயகி"எனவும் வழங்கப்பெறுகிறாள். அன்னையின் திருமுக சௌந்தர்யம் "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி" என்று பாடிய அபிராமி பட்டரின் பாடலை உணர்த்துகிறது.

கிழக்கு நோக்கிய பெருமானின் சன்னதியின் முன் வலம்புரி விநாயகர் மிக நேர்த்தியாக அண்டிவந்தோர்க்கு அருள் வதற்காகவே அமர்ந்தது போல் வீற்றிருக்கிறார். நர்த்தன விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, வல்லீதேவசேனா சமேத ஸுப்ரமணியர், ஸ்ரீமகாவிஷ்ணு, பிரம்மா, சண்டிகேஸ்வரர், துர்கை, ஷண்முகர், பைரவர், வீரபத்ரர், சிவசூரியன் நவக்ரஹங்கள் என அனைத்து பரிவார மூர்த்திகளுடன் திருநந்திகேஸ்வரத்து அம்மையப்பன் திருவருள்பாலிக்கிறார். ஸ்ரீ நந்திசித்தரால் பூஜிக்கப்படும் நந்திதேவர் இங்கு சுயம்புவான நந்தீஸ்வர பெருமானை வழிபடுவதால் இங்கு ப்ரதோஷம் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இத்திருக்கோயிலின் மீது பல வருடங்களுக்கு முன்பு இடி விழுந்தது. சுற்றியுள்ள வீடுகளையும், குடிசைகளையும் குடிமக்களையும் காப்பாற்ற வேண்டி தியாகராஜனான இறைவன் இடியை நாமே தாங்கினான் போலும். இதில் இறைவன் மற்றும் அன்னையின் விமானங்கள் பழுதுபட்டன. எனவே கடந்த 21.1.91 அன்று பாலாலயம் (இளங்கோயில்) அமைத்து விமானங்களைப் புதுப்பித்து, ப்ரகார மண்டபம், ஸ்ரீ வல்லப கணபதி, ஸ்ரீ ஸுப்ரமணியர், ஸ்ரீ நடராஜர் திருச்சபை, மகாநந்தி மண்டபம் ஆகியவை அமைத்து திருப்பணிகள் செய்யப்பெற்றது.

ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரியர் அருளாசியோடும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருள்வழி காட்டு தலின் படி அவன் அருளால் அவன்தாள் வணங்கி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட சமயச்சேவை அமைப்பான இந்துசமய மன்றம் நந்திவரம்-கூடுவாஞ்சேரி கிராமத்தார்கள் வாயிலாக அரசு அனுமதி யுடன் அன்பர்களின் ஆதரவை ஏற்று திருப்பணிகளை நிறைவு செய்து கடந்த 4.6.98 அன்று வெகு விமரிசையாக மகாகும்பாபி ஷேகம் நடத்தியது.

இத்தலத்து இறைவனை ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ தருமபுர ஆதீன குருமஹாசன்னிதானம், ஈழத்துசித்தர் மற்றும் எண்ணற்ற மகான்கள் போற்றி பரவியுள்ளனர். அண்மைக் காலத்தில் இதே தலத்தில் இவ்விறைவனுக்கு தொண்டு செய்து அண்டியவர்களுக்கு உடற்பிணி தீர்த்த மலையாள ஸ்வாமிகள் இத்தலத்திலேயே முக்தியடைந்து அருள்பாலிக்கிறார்கள்.

சித்தர்கள் வாழும் பூமியிது. சித்தர் போற்றும் இறைவன் இவர், சித்தமலமறுத்து சிவமாக்கும் பெருமானை வந்து தரிசிப்பீர், வாழ்வில் வளம் பெறுவீர்.

# நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாதருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்துஅருள் கொடுக்கும் செல்வநந்தி

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி

★★★★★★

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீசௌந்தர்ய நாயகி பஞ்சரத்னம்

(G.V. ஸுப்ரமண்யம் அவர்கள் இயற்றியது)

ஸ்ரீ நந்தீஸ்வர வாமபாகநிலயாம் சிந்தாமணீம் சின்மயீம்
ஆனந்தார்ணவ சக்ர மத்ய வஸதீம் காமேச கல்பத்ருமாம
ஆதிக்ஷாந்த சுபாக்ஷ ராக்ஷ வலயாம் ஆபீன வக்ஷோஜ்வலாம்
ஸ்ரீநந்தீபுர வாஸீநீம் பகவதீம் சௌந்தர்ய ராக்ஞீம் பஜே 1

மாதங்காநன ஷண்முகாக்ய ஜனனீ மாதா ஸதா பாதுமாம்
க்ரீம் கார த்ரய மந்த்ர ரூப விலஸத் வித்யாதி ராக்ஞீ சிவா
காளீ காஞ்சன காந்தி புஞ்ஜ விலஸத் வித்யுத் பிரபாபாஸினி
ஸ்ரீநந்தீபுர வாஸிநீம் பகவதீம் சௌந்தர்ய ராக்ஞீம் பஜே .2

காமாரிப்ரிய பாமினீம் பகவதீம் லீலா விபூதிப்ரதாம்.
சாக்தாசார் ஸமர்ச்சிதாங்ரி யுகளாம் ஸம்பத் கரி ரூபிணீம்
சிந்தா சோக விநாசினீம் பகவதீம் சித்ரூபவல்லீம் ம்ந்தாம்
ஸ்ரீநந்தீபுர வாஸிநீம் பகவதீம் சௌந்தர்ய ராக்ஞீம் பஜே 3

பஞ்சப்பிரம்ம மஹாசனா பகவதீ பஞ்சாத்ம த்ருப்தா முதா
பஞ்ச த்ரயக்ஷர மந்த்ர தன்வீ மஹத் பஞ்சேன சம்பூஜிதா
பஞ்சாம்னாய பாராயணாம் பரசிவாம் பாபாபஹாரீம் பராம்
ஸ்ரீநந்தீபுர வாஸிநீம் பகவதீம் சௌந்தர்ய ராக்ஞீம் பஜே 4

துர்கே துஸ்தர ஸர்வகார்ய கடனாலீலா விலாஸாத்க்ஷணாத்
யோகேஸேன குருப்ரஸாத விபவாத் ஸார்த்தூல பஞ்ஜை ஸுபை:
ரௌத்ரீ வத்ஸர மாக சுக்ல த்விதயே இத்தம் ஸ்துதேஹி ஸம்ஸ்துதா
ஸ்ரீநந்தீபுர வாஸிநீம் பகவதீம் சௌந்தர்ய ராக்ஞீம் பஜே 5

★★★★★★

ஸ்ரீ காசிப முனிவர் அருளிய

# காரிய ஸித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆக மங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்புகூரத் தொழுகின்றோம் 1

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளெவனில்
உலகிற் பிறக்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம் 2

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக் கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதிபொன் சரணம் சரணம் அடைகின்றோம் 3

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப் பான்எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம் 4

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்புரிந்து சரணம் அடைகின்றோம் 5

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன்யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம் 6

மண்ணில் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன்நீர், இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன்யான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாசஅறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப் பணிக்கும் அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றிமேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைக் திகழச் சரணம் அடைகின்றோம் 8

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்திகளில் தோத்திரஞ் செயினும் சகலகரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடையிப்
பந்தம் அகல ஓர் எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும் 9

திங்கள் இரண்டும் தினந்தோறும் திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின் பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும் தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார் 10

★★★★★★

ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்[து] ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கஎன் றுவந்து;
வரவர வேலா யுதனார் வருக,
வருக, வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா! வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன்! வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக.
சரஹண பவனார் சடுதியில் வருக,
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண, வீரா! நமோநம,
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக, வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக.
என்னை ஆளும்இளை யோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக;
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக;
ஆறுமு கமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க,
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு,
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என் உயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க,
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க,
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க,
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க,
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க,
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க,
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க,
மார்பை இரத்ன வடிவேல் காக்க,
சேர்இள முலைமார் திருவேல் காக்க,
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க,
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க,
பழுபதி னாறும் பருவேல காக்க,
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க,
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க,
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க,
ஆண் குறிஇரண்டும் அயில்வேல் காகக,
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க,
வட்டக் குதத்தை வடிவேல் காக்க,
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க,
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க,
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க,

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க,
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக,
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க,
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க,
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க,
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க,
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க,
நோக்க நோக்க நொடியில் நோக்க,
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்,
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்,
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்,
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந் தோடிட,
ஆனை அடியினில் அரும்பா வைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்,
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்,
ஒட்டியச் செருக்கும், ஒட்டியப் பாவையும்,
காசும் பணமும் காவுடன் சோறும்,
ஓதும்அஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாள்எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட,
வாய்விட் டலறி மதிகெட் டோட,
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்,
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டுக்
கட்டி யுருட்டு கால்கை முறியக்,
கட்டு கட்டு கதறிடக் கட்டு;
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட,
செக்கு செக்கு செதில்செதி லாக,
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு,
குத்து குத்து கூர்வடி வேலால்,
பற்று பற்று பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி தணல் அதுஆக,
விடுவிடு வேலை வெருண்டது ஓட,
புலியும் நரியும் புன்னரி நாயும்,
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ர்அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்த ரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக் கருள்வாய்!
ஈரேழ் உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்;
சரஹண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான்உனைப் பாட,
எனைத் தொடர்ந்து இருக்கும்எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக,
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே உன்னருள் ஆக,
அன்புடன் இரட்சி, அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்

வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க! வாழ்க! என்வறுமைகள் நீங்க;
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி,
நேச முடன் ஒருநினைவது ஆகிக்,
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயலது அருளுவர்;
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்,
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்;
கந்தர் கைவேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா! போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!.
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே,
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

—ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் ஸம்பூர்ணம் —

உ
சிவமயம்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# சிவபுராணம்

திருவாசகம்] [8ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ்சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெ ல்லையிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்

வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினை யேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனை ந்தும்வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகிஅல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறு வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பினுட் கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ

அபிராமியம்மை துணை

## ஸ்ரீ அபிராமிபட்டர் அருளிய

# அபிராமியந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்துந்தில்லை
ஊரார்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும் பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

### நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்பஞ் சிலையுமென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே. 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம்என் சென்னியதே. 5

சென்னிய துன்பொன் திருவடித் தாமரை, சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றும்உன் தன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென்க ருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன, வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன, பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமுஞ் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம்மே! வந்தென் முன்னிற்கவே 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாள்எழு தாமரையின்
ஒன்றும் அரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானம்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோரை வையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏதன்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 21

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேஉன்னை யன்றி மற்றோர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்!
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர், சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர், பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் தண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்,மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ !
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரு மொளிக்கிட:மேஎண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே ! 16

அதிசய மான வடிவுடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே 17

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளி நிற்கவே. 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென்விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி யுறைபவளே. 19

உறைகின்ற நின்திருக் கோயில், நின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன் றன்நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர்கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே அளியஎன் கண்மணியே. 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக் கபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின் றேத்துவனே. 25

ஏத்தும் அடியவ ரீரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழலணங் கேமணம் நாறுநின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாம்நின் னருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்குஞ் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண் டாய்கொண்ட தல்ல என்கை
நன்றே உனக்கினி நானென் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுருவே அருவேஎன் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தாரினி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்ட டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேஅடுங் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுது வந்(து) அஞ்சலென் பாய் அத்தர் சித்தங்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே [மெல்லாம்
உழைக்கும் பொழுதுன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போயிருக்கும் சதுர்முகமும்
பைந்தே னலங்கல் பருமணி யாகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பகவின் மணநாறும் சீரடி சென்னி வைக்க
எங்கட் கொருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருண்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்து வஞ்சத்(து)
இருளே துமின்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடஞ் சேர்பவளே 37

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பணிமுறுவல்
தவளத் திருநகை யுந்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடைச் சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக் குன்றன் அடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடைஉண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை, நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப்பேதைநெஞ்சில்
காணுதற் கண்ணிய எல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ணமன் றோமுன்செய் புண்ணியமே 40

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிருகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கைமலை கொண்டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பணிமொழி வேதப் பரிபுரையே , 42

பரிபுரச் சீரடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே இவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர் தமக் கன்னையும் ஆயினள் ஆகையினால் செய்தே
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்குந் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகம் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டுமெட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார், பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த அரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்(று)
ஆயகி யாதி யுடையாள் சரணம் அரணமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணஞ் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 51

வையம் துரக மதகிரி மாமகு டம்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யப்பட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற(து)
அன்னா ளகமகி ழானந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னாதொழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 55

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையும் நீங்கிநிற் பாளென்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருளறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படிஇரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய அறஞ்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாயிது வோஉன்றன் மெய்யருளே.57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகிநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி.யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர்வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றேஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயேனை யு மிங்கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டு கொண்டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே 62

தேறும் படிசில ஏதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந்தறி குறிக்குஞ்சமயம்
ஆறுந் தலைவி இவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறும் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றி
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமின்றிக்
காணேன்·இருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத்தடக் கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலுநின்றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில் வையாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கள்„தொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவைஒளி யூறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாருந் தவமுடை யார் படை யாத தனமில்லையே. 68

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழுவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேஇரங் கேலுனக் கென்குறையே. 71

என்குறை தீரநின் றேத்துக்கின் றேனினி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை காண்இருநீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்ததாமரையே. 72

தாமங் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடிஇணையைப்
பயனென்று கொண்டவர் பாவையராடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியும் ஈரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தினின் கோலமெல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சவி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்புங் கனகக் கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்புங் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேனென் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வா என்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாஎன்க ணோடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தி லாரணங் கே! அகி லாண்டமு நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. 82

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகிரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்குசெம் பட்டுடை யாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத்தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங் கென்னையினிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்குந் திரிபுரை யாள் திரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. 85

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவ ரழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே 87

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் துணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழு தென்முன் னேவர வேண்டும் வருந்தியுமே, 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ் நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்த ராவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை உனக்கே பரமெனக் குள்ள வெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில்தன்னைத் தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகலறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாய ருக்கன் றிமவான் அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப்பொருகண்ணும் நெஞ்சிலெப்போதும் உதிக்கின்றவே. 100

### நூற்பயன்

ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையிற் பாசாங் குசமுங்கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே

# சகல சௌபாக்கிய அஷ்டகம்

மங்கள மாலினி மன்மத ரூபிணி மஞ்சுள பாஷினி மதிவதனீ
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்து நீசகல சௌபாக்கியந் தந்தருள்வாய்
பங்கயன் மாலொடு பரமனும் பணிந்திடும் பதுமப தங்கொளும் பகவதியே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 1

கஞ்சியில் மிஞ்சிய கருணையு டன்திகழ் கற்பக மென்றொளிர் சிற்பரையே
தஞ்சமென் றுன்சரண் சாருமெ னக்கு நீ சகலசௌ பாக்கியந் தந்தருள்வாய்
அஞ்சிய நெஞ்சுட னடிகள் பணிந்திடும் அன்பருக் கபயம ளிப்பவளே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 2

பூமகள் நாமகள் பூவடி போற்றிடப் பொலிவுடன் கொலு கொளும் பூரணியே
தாமத மின்றியென் சஞ்சலம் தவிர்த்து நீ சகல சௌபாக்கியந் தந்தருள்வாய்
கோமள முகமதிற் குறுநகை கொஞ்சிடக் குங்கும முந்திகழ் கோமகளே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 3

பங்கய னுன்பதத் தூளிக ளாற்பல வண்டமும் நன்கு படைத்தனனே
சங்குடை மாயவன் தன்தலை ஆயிரம் கொண்டவை சீர்படத் தாங்கினனே
சங்கர னிறுதியிற் சாம்பரு மாக்கியே தன் நுதலொளிபெறத் தரித்தனனே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 4

கற்புக வல்லியுங் காஞ்சிகா மாக்ஷியுங் கயற்கண்மீ னாக்ஷியுமானவளே
நற்கதி கூடிட சஞ்சல மோடிட சகலசௌ பாக்கியம் தந்தருள்வாய்
பொற்பதம் போற்றிடும் புண்ணியர் கவலைகள் போக்கியருள்புரி பூரணியே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 5

ஆதியு மந்தமும் மற்றசு தந்தரி அகிலமும் தானென ஆனவளே
பாதச ரோருகம் பணியுமெ னக்கு நீ பரிந்துசௌ பாக்கியம் பல்கிடுவாய்
வேதமெ லாம்புகழ் மீன்விழி யாள் பசும் பொன்னென மின்னிய மேனியளே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 6

நாதமும் பிந்துவும் நாடுமெய் ஞானமும் நானென நன்கு மொழிந்தவளே
வேதனை நீங்கிட வெம்மிடி தீர்ந்திடவிரைவில் சௌபாக்கியம் தந்தருள்வாய்
போதமெ லாம்தரும் புண்ணி யளேபல போகமு மீந்தருள் பூரணியே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 7

ஜயஜய மங்கள சண்டிகை யேஜய ஜயஜய சாமுண்டேஸ்வரியே
ஜயஜய ஜயசௌபாக்கிய சுந்தரி ஜயமகி ஷாஸுர மர்த்தினியே
ஜயஜய ஜயலலி தாம்பிகை யேஜய ஜயபுவ னேஸ்வரி பைரவியே
ஜயஜய மங்கள கவுரிம கேஸ்வரி திரிபுர சுந்தரி காமாக்ஷி 8

★★★★★★

# தன விருத்தி மாலை

## ஆதிலட்சுமி

சோதிமிக வுடையாள் சோம்பறற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிக்காள்
பூதி மிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா

## தான்யலட்சுமி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலக்கதையும் பெற்றவளே
கண்படைத்த பயனுகக்கக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா

## வீரலட்சுமி

சூலமோடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நிலத்திரை யமுதத்தாள் நிங்காநற் புகழுடையாள்
மாலவனு மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா

## கஜலட்சுமி

தடாகத் தாமரையாள் தன்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியவர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா

## சந்தான லட்சுமி

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னையவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யமுதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா

## விஜயலட்சுமி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள் மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா

## ஐஸ்வர்ய லட்சுமி

நாற்கரந்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம்போல் தனத்தைக் காத்திடலே பெய்திடுவாள்
நாற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பார்பணியும் ஐஸ்வர்யப் பாவையளே போற்றியம்மா

## தன லட்சுமி

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தன்மைதரு தனமகளே போற்றியம்மா.

★★★★★★

ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் அருளிய

## ஸகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க என் வெள்ளை உள்ளம்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே! (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே! (2)

அளிக்கும் செழுந் தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும்படிக்கு என்று கூடுங் கொலோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே சகலகலாவல்லியே! (3)

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே! . (4)

பஞ்சப்பு இதம் தரும் செய்யப் பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே! (5)

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே! (6)

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலாவல்லியே! (7)

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒரு காலமும் சிதையாமை
நல்கும் கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலாவல்லியே! (8)

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தில்தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசு அன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே! (10)

ஸகலகலாவல்லி மாலை நிறைவு

★★★★★★

# திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்

## 1. பாலகாண்டம்

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ
நலமந்தமில்லதோர் நாட்டில்
அந்தமில் பேரின்பத் தடிய ரோடு
ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வறும் அமரர்கள் அதிபதியான
அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பன்
அலைநீர் கடலுள் அழுந்தும் நாவாய் போல்
ஆவாரார் துணையென்று துளங்கும்
நல்ல அமரர் துயர் தீர
வல்லரக்கர் இலங்கை பாழ்படுக்க எண்ணி
மண்ணுலகத்தோ ருய்ய
அயோத்தி என்னும் அணி நகரத்து
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்க்
கௌசலைதன் குல மதலையாய்த்
தயரதன் தன் மகனாய் தோன்றிக்
குணம் திகழ் கொண்டலாய்
மந்திரங்கொள் மறைமுனிவனின் வேள்வி காக்கநடந்து
வந்தெதிர்த்த தாடகை தன் உரத்தைத் கீறி
வல்லரக்கர் உயிருண்டு கல்லைப் பெண்ணாக்கிக்
காரார் திண்சிலை யிறுத்து
மைதிலியை மணம் புணர்ந்து
இருபத் தொருகால் அரசுகளை கட்ட
மழுவாளி வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றிகொண்டு
அவன் தவத்தை முற்றும் செற்று
அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி

## 2. அயோத்தியா காண்டம்

அரியணை மேல் மன்னன் ஆவான் நிற்கக்
கொங்கைவன கூனி சொற் கொண்ட
கொடிய கைகேயி வரம் வேண்ட
அக்கடிய சொற் கேட்டு
மலக்கியமா மனத்தனனாய் மன்னவனு மறாதொழியக்
குலக்குமரா! காடுறையப்போ என்று விடை கொடுப்ப
இந்நிலத்தை வேண்டாது
ஈன்றெடுத்த தாயாரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து
மைவாய களிறொழிந்து மாவொழிந்து தேரொழிந்து
கலனணியாதே காமரெழில் விழலுடுத்து
அங்கங்கள் அழகு மாறி
மானமொரு மென்னோக்கி வைதேகியின் துணையா
இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின்செல்லக்
கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் கடந்து போய்ப்
பத்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து

வனம் போய்ப் புக்குக் காயோடு நீடு கனியுண்டு
வியன் கானம ரத்தி நீழல்
கல்லணைமேல் கண்துயின்று
சித்திரகூடத் திருப்ப, தயரதன் தான்
"நின் மகன் மேல் பழிவிளைத்திட்டு
என்னையும் நீள்வானில் போக்க
என் பெற்றாய் கைகேசீ!
நானும் வானகமே மிக விரும்பிப் போகிறேன்"
என்று வானேறத்
தேனமரும் பொழில்சாரல் சித்திரகூடத்து
ஆனை புரவி தேரோடு காலாள்
அணி கொண்ட சேனை சுமந்திரன்
வசிட்டருடன் பரத நம்பி பணியத்
தம்பிக்கு மரவடியை வான்பணயம் வைத்துக் குவலயத்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற் கருளிவிடைக் கொடுத்துத்
திருவுடை திசைக்கருமம் திருத்தப்போய்த்
தண்ட காரணியம் புகுந்து

### 3. ஆரண்ய காண்டம்

மறைமுனிவருக்கு
'அஞ்சேல்மின்!' என்று விடைகொடுத்து
வெங்கண் விறல் விராதனுக்கு விற்குனித்து
வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கிப்
புலர்ந்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேராவன்
என்னைப் பொன்னிறங் கொண்ட
சுடு சினத்த சூர்ப்பணகாவைக்
கொடி மூக்கும் காதிரண்டும்
கூரார்ந்த வாளால் ஈரா விடுத்துக்
கரனொடு தூடணன் தன்னுயிரை வாங்க
அவள் கதறித் தலையில் அங்கை வைத்து
மலையிலங்கை யோடிப்புகக்
கொடுமையில் கடுவிசை அரக்கன்
அலை மலி வேற் கண்ணாளை அகல்விப்பான்
ஒருருவாய் மானை யமைத்துச் சிற்றெயிற்று
முற்றில் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து
இலைக் குரம்பில் தனியிருப்பில்
கனி வாய்த் திருவினைப் பிரித்து
நீள் கடல்சூழ் இலங்கையில்
அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோய்
வம்புலாங்கடிகாவில் சிறையாய்வைக்க
அயோத்தியர்கோன் மாயமான் மாயச் செற்று
அலைமலிவேற் கண்ணாளை அகன்று தளர்வெய்திச்
சடாயுவை வைகுந்தத்தேற்றிக்
கங்குலும் பகலும் கண் துயிலின் றிக்
கானகம் படியுலாவி யுலாவிக்
கணை யொன்றினால் கவந்தனை மடித்துச்
சவரிதந்த கனியுவந்து

### 4. கிஷ்கிந்தா காண்டம்

வன மருவு கவியரசன் தன்னோடு காதல்கொண்டு
மரா மரமேழெய்து
உருத்தெழு வாலி மார்பில்
ஒரு கணை உருவ ஓட்டிக்
கருத்துடைத் தம்பிக்கு
இன்பக் கதிர் முடி அரசளித்து
வானரக் கோனுடனிருந்து வைதேகி தனைத்தேட
விடுத்த திசைக் கருமம் திருத்து
திறல் விளங்கு மாருதியும்
மாயோன் தூதுரைத்தல் செப்ப!

### 5. ஸுந்தர காண்டம்

சீராரும் திறல் அநுமன் மாக்கடலைக் கடந்தேறி
மும்மதிள் நீள் இலங்கை புக்குக்கடிகாவில்
வாராருமுலை மடவாள் வைதேகி தனைக்கண்டு
நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!
அயோத்தி தன்னில் ஓர்
இடவகையில் எல்லியம் போதினி திருத்தல்
மல்லிகை மாமாலை கொண்டங்கார்த்ததும்
கலக்கியமா மனத்தாளாய்க் கைகேயி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தனனாய் மன்னவனும் மறாதொழியக்
'குலக்குமரா! காடுறையப்போ' என்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடங்கேகியதும்,
கங்கை தன்னில்,
கூரணிந்த வேல்வலவன் குகனோடு
சீரணிந்த தோழமை கொண்டதுவும்,
சித்திரகூடத் திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்
சிறுகாக்கை முலைதீண்ட மூவுலகும் திரிந்தோடி
'வித்தகனே! ராமாஓ! நின்னபயம்' என்ன
அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும்
பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட
நின்னன்பின் வழிநின்று சிலைபிடித் தெம்பிரானேகப்
பின்னேயங்கு இலக்குமனன் பிரிந்ததுவும்
'அயோத்தியர் கோனுரைத்த அடையாளம்
ஈதவன்கை மோதிமே' என்று
அடையாளம் தெரிந்துரைக்க
மலர்குழலாள் சீதையும்,
வில்லிறுத்தான் மோதிரம் கண்டு,
'அநுமான் அடையாளம் ஒக்கும்' என்று
உச்சிமேல் வைத்துகக்கத்
திறல் விளங்கு மாருதியும்
இலங்கையர்கோன் மாக்கடிகாவை யிறுத்து,
காதல் மக்களும் சுற்றமும் கொன்று,
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர்கோன் சினமழித்து மீண்டு, அன்பினால்
அயோத்தியர்கோன் தளிர்புரையும் அடியிணைபணிய

## 6. யுத்த காண்டம்

கான எண்கும் குரங்கும் முசுவும்
படையாக் கொடியோனிலங்கை புகலுற்று
அலையார் கடற்கரை வீற்றிருந்து
செல்வ விபீடணற்கு நல்லானாய்
விரநீ ரிலங்கை யருளிச்
சரண்டிக்க குரைகடலை அடலம்பால் மறுகஎய்து
கொல்ல விலங்கு பணிசெய்ய
மலையாலணைகட்டி மறுகரையேறி
இலங்கை பொடி பொடியாகச்
சிலைமலி செஞ்சரங்கள் செல வுய்த்துக்
கும்பனோடு நிகும்பனும்பட
இந்திரசித் தழியக் கும்பகர்ணன் பட
அரக்கராவி மாள, அரக்கர்
கூத்தர் போலக் குழமணி தூரமாட
இலங்கை மன்னன் முடி யொருபதும்
தோளிருபதும் போயுதிரச்
சிலைவளைத்துச் சரமழை பொழிந்து
கரந்துணிந்து வெற்றிகொண்ட செருக்களத்துக்
கடக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்
எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்
மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து
மணிமுடி பணிதர அடியிணை வணங்கக்
கோலத்திருமா மகளோடு
செல்வவீடணன் வானரக் கோனுடன்
இலகுமணி நெடுந்தேரேறி,.
சீரணிந்த குகனோடுகூடி
அங்கணெடு மதிள்புடைசூழ அயோத்தி எய்தி
நன்னீராடிப்
பொங்கிவளவாடை யரையில் சாத்தித்
திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கலனணிந்து
சூட்டு நன் மாலைகளணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமணனும் இரவு நண்பகலும் ஆட்செய்ய
வடிவிணை இல்லாச் சங்குதங்கு முன்கை நங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்கா தனத்திருந்து ஏழுலகும்
தனிக்கோல் செல்ல வாழ்வித் தருளினார்.

### அஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்றாகி ஆரியர்க்காக ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்,
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவனெம்மை அளித்துக் காப்பான்

★★★★★★



உ

ஸ்ரீ முருகன் துணை
ஸ்வாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ ஐயப்பன் நமஸ்கார ஸ்லோகங்கள்

உ

## நமஸ்கார ஸ்லோகங்கள்

*[ஒவ்வொரு ஸ்லோகத்தையும் கூறி, 'ஸ்வாமியே சரணம் ஐயப்பா!' என்று சொல்லி நமஸ்காரம் செய்யவேண்டும்]*

1 லோகவீரம் மஹாபூஜ்யம் சர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

2 விப்ரபூஜ்யம் விச்வ வந்த்யம் விஷ்ணுசப்போப்ரியம் சுதம்
க்ஷிப்ரப்ரஸாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

3 மத்த மாதங்க கமனம் காருண்யா ம்ருத பூரிதம்
சர்வ விக்னஹரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

4 அஸ்மத் குலேச்வரம் தேவம் அஸ்மத் சத்ரு விநாஸனம்
அஸ்மத் இஷ்டப்ரதாதாரம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

5 பாண்ட்யேச வம்சதிலகம் கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம் சாஸ்தாரம் ப்ராணமாம்
யஹம்

6 அருஞோதய ஸங்காசம் நீலகுண்டல தாரிணம்
நீலாம்பரதரம் தேவம் வந்தேஹம் ப்ரம்ம நந்தனம்
7 சாப பாணம் வாம ஹஸ்தே ரௌப்ய வேத்ரஞ்ச
தக்ஷிணே
விலஸத் குண்டலதரம் வந்தேஹம் விஷ்ணு நந்தனம்
8 வியாக்ராரூடப் ரக்தநேத்ரம் ஸ்வர்ணமாலா விபூஷணம்
வீரபட்டதரம் கோரம் வந்தேஹம் சம்புநந்தனம்
9 கிங்கிண்யொட்யாண பூதேசம் பூர்ண சந்தர நிபானனம்
கிராத ரூப சாஸ்தாரம் வந்தேஹம் பாண்ட்ய நந்தனம்
10 பூதவேதாள சம்ஸேவ்யம் காஞ்சனாத்ரி நிவாஸினம்
மணிகண்ட மிதிக்யாதம் வந்தேஹம் சக்தி நந்தனம்
11 ஓம்கார மூர்த்தி மார்த்திக்னம் தேவம் ஹரிஹராத்மஜம்
சபரீபீட நிலையம் சாஸ்தாரம் ப்ரண தோஸ்ம்யஹம்
12 நக்ஷத்ர நாதவதனம் நாதம் த்ரிபுவனாவனம்
நௌமிதா சேஷபுவனம் சாஸ்தாரம் நௌமி பாவனம்
13 மன்மதாயுத ஸௌந்தர்யம் மஹாபூத நிஷேவிதம்!
ம்ருகயாரஸிகம் ஸூரம் சாஸ்தாரம்ப்ரணதோஸ்ம்யஹம்

14 ஸிவப்ரதாயினம் பக்ததைவதம் பாண்ட்ய பாலகம்
சார்தூல துக்க ஹர்த்தாரம் சாஸ்தாரம் ப்ரணதோஸ்ம்
யஹம்
15 வாரணேந்த்ர ஸமாரூடம் விச்வத்ராண பராயணம்
வேதோத் பாஸிகராம்போஜம் சாஸ்தாரம் ப்ரணதோஸ்ம்
யஹம்
16 யக்ஷிண்யபிமதம் பூர்ண புஷ்களா பரிஸேவிதம்
க்ஷிப்ரப்ரஸாத நிரதம் சாதாரம் ப்ரணதோஸ்ம் யஹம்
17 த்ரயம்பகபுராதீசம் கணாதிப சமன்விதம்
கஜாரூடம் அஹம்வந்தே ஸாஸ்தாரம் குலதைவதம்
18 ஸிவவீர்ய ஸமுத்பூதம் ஸ்ரீனிவாச தனூத்பவம்
ஸிகிவாஹா னுஜம் வந்தே ஸாஸ்தாரம் குலதைவதம்
19 யஸ்ய தன்வந்தரிர் மாதா பிதாருத்ரோ பிஷக்தம
தம்ஸாஸ்தாரம் அஹம் வந்தே மஹா வைத்யம்
தயாநிதிம்
20 பூத நாத சதானந்த சர்வ பூத தயாபரஸ
ர்க்ஷ ரக்ஷ மஹா பாஹோ சாஸ்த்ரே துப்யம் நமோ நம:



நல்வணக்கங்களுடன் : -


# ராசி எண்டர்பிரைசஸ்

28, ராஜாஜி தெரு, கூடுவாஞ்சேரி-603 202
உரிமையாளர் : திரு. க. இராமச்சந்திரன்



மலர் அச்சு உபயம்:-
ராஜன் & கம்பெனி பிரிண்டர்ஸ்
எண். 1, கூம்ஸ் தெரு, சென்னை - 600 001.